செ.வெ.எண்: 26/2021 நாள்: 26.06.2021

# பத்திரிக்கை செய்தி

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் சங்கரநாராயணசுவாமி திருக்கோவில், தென்காசி அருள்மிகு காசி விசுவநாத சுவாமி திருக்கோவில் கலையரங்கத்தில் இன்று (26.06.2021) கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக வாழ்வாதாரம் இழந்துள்ள இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தின் கீழுள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.4000/-, 10 கிலோ அரிசியுடன் 15 வகை மளிகை பொருட்கள் கொண்ட தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கோபால சுந்தர ராஜ் இ.ஆ.ப., அவர்கள், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தனுஷ் எம்.குமார் ஆகியோர் வழங்கினார்கள்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள கொரோனா வைரஸ் தடுப்புப்பணி குறித்து பல்வேறுக்கட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் கொரோனா காலங்களில் பொதுமக்களின் சிரமங்களை போக்கும் வகையில் அரிசி அட்டை உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு தவணையாக ரூ.4000/- மற்றும் 14 வகையான மளிகைப்பொருட்கள் கொண்ட தொகுப்பினை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், வாழ்வாதரம் இழந்துள்ள இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள திருக்கோவில்களில் மாத சம்பளமின்றி பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு உதவித்தொகையாக ரூ.4000/-மும், 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகை பொருட்கள் (மஞ்சள் பொடி, கடலை பருப்பு, உளுந்து பருப்பு, துவரம்பருப்பு, கோதுமை மாவு, சீனி, தேயிலை, புளி, வெந்தயம், மிளகு, சிரகம், மிளகாய்பொடி, எண்ணெய், அப்பளம், கடுகு) கொண்ட தொகுப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர். கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வழங்குவதற்கு உத்தரவிட்டதற்கிணங்க இன்று (26.06.2021) சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணசாமி திருக்கோவில் திருமணமண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழுள்ள திருக்கோவில்களில் பணியாற்றும் 205 அர்ச்சகர்கள், பட்டாட்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும், தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோவில் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கலையரங்கத்தில் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழுள்ள திருக்கோவில்களில் பணியாற்றும் 91 அர்ச்சகர்கள், பட்டாட்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும் ஆகமொத்தம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழுள்ள திருக்கோவில்களில் பணியாற்றும் 296 அர்ச்சகர்கள், பட்டாட்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் அரசு வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி பின்பற்றி சமூக இடைவெளியுடன் முகக்கவசம் அணிந்து, தடுப்பூசி செலுத்தியும், கொரோனா பரவலை கட்டுப்படுவதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கோபால சுந்தர ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பழனிநாடார், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.அன்புமணி, துணை ஆணையர் திரு.கணேசன், உதவி ஆணையர் (கூ.பொ) திரு.அருணாசலம் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.**